# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

*************

**முறையீட்டு மனு எண்: 743/2016/பே**

**ஆணை எண்: 26/ நாள் : 15–02–2018**

**திரு ஏ. பெருமாள்,**
**அம்பேத்கார் தெரு,**
**வளவனூர் மற்றும் அஞ்சல்,**
**விழுப்புரம் மாவட்டம்.** -- **முறையீட்டு மனுதாரர்**

**செயல் அலுவலர்,**
**வளவனூர் பேரூராட்சி,**
**விழுப்புரம் மாவட்டம்.** -- **எதிர் மனுதாரர்**

விழுப்புரம் மாவட்டம், வளவனூர் அம்பேத்கார் தெருவினை சேர்ந்த திரு ஏ. பெருமாள் என்பவரின் நாளிடப்படாத முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 10857/2015/இ.2/நாள் 14.07.2016ன்படி இம்முறை மன்ற நடுவத்தில் 25.07.2016ல் பெறப்பட்டது. முறையீட்டு மனு எண் 743/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு இறுதி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், விழுப்புரம் மாவட்டம், வளவனூர் பேரூராட்சியில் பினாமி பெயரில் ஒப்பந்த பணிகள் வழங்குவது சம்பந்தமாக பல்வேறு புகார்களை தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 25.07.2016ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுவினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015ன் விதி 6ல் நிர்ணயிக்கப்பட்டவாறு கட்டணம் ரூ 10/– மதிப்பிலான நீதிமன்ற வில்லையுடன் உரிய படிவத்தினை (படிவம் 1) பூர்த்தி செய்து சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது. ஆனால் மனுதாரரால் உரிய முறையில் நாளது தேதி வரை முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்படவில்லை.

இம்முறைமன்ற நடுவ 13.01.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரர் தனது மனு தொடர்பான விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2017ல் ஆஜராக ஆணையிடப்பட்டது.

மேற்படி அழைப்பாணை "முகவரியில் முறையீட்டு மனுதாரர் இல்லை" என்ற விளக்கத்துடன் அஞ்சல் துறையினரால் மீள இம்முறைமன்ற நடுவத்திற்கு திரும்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 13.01.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையிட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறையீட்டு மனு தொடர்பாக தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2018 அன்று நேரில் ஆஜராக வளவனூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 17.01.2018 அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

24.01.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் வளவனூர் பேரூராட்சிசெயல் அலுவலர் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளதுடன் தனது கடித ந.க.எண். 33/2017/அ.1 நாள் 29.01.2018ன் மூலம் அறிக்கையினையும் சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, செயல் அலுவலரின் நேரடி வாக்குமூலம் மற்றும் விளக்க அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாருக்கு மனுவினை உரிய முறையில் விதிகளின்படி சமர்ப்பிக்க ஆணையிட்டு வாய்ப்பளித்தும் மனுவினை முறையாக சமர்ப்பிக்கவில்லை. மேலும், தனது தரப்பிலான நேரடியான விளக்கத்தினை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகக் கோரி அழைப்பாணையும் அனுப்பப்பட்டது, ஆனால் அஞ்சல் துறையினரின் குறிப்புகளின் மூலம் முறையீட்டு மனுதரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் இல்லை என தெரியவந்துள்ளது. எனவே இம்மறையீட்டு மனு ஏற்கத் தக்கதல்ல என தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//

உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**பெறுநர்**

செயல் அலுவலர்,
வளவனூர் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்.

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

**நகல்**

பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108

**நகல்**

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கடலூர் மண்டலம்,
பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை, கடலூர்.

22/2/18

சென்னை–600 032